DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | **CC.177/2021** |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| Deposition of Witness for | | PW 1 |
| | | Prosecution |
| | | Court |

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.பொன்னுசாமி** | Caste | : |
| Father/Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 77 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

**நாள் - 22.06.2022**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 01.13

நான் பாப்பநாய்க்கன்பட்டியில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சின்னப்பையன் எனது மகன் ஆவார். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 2 மணி அளவில் நான் வீட்டில் இருந்தபொழுது, ஒருவர் எனக்கு போன் செய்து, எனது மகன் வேலைக்கு சென்றவன் தும்பல் ரோட்டில் சந்தைப்பேட்டை அருகில் பிக்கப் வேன் மோதி அடிபட்டுவிட்டதாக தகவல் சொன்னார். உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்று அடிபட்ட எனது மகனை பார்க்க, அவனுக்கு முகத்திலும், வலதுபக்க கன்னத்திலும், காயம் ஏற்பட்டிருந்தது. அடிபட்ட எனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய பிக்கப்வேனின் ஓட்டுனர் வாகனத்தை பாப்பாநாய்க்கன்பட்டிக்கு எடுத்துச்சென்றுவிட்டார். பின்புதான் விபத்து ஏற்படுத்திய நபரின் விபரத்தை கேட்டு தெரிந்துக்கொண்டேன். தற்பொழுது ஞாபகம் இல்லை. பின்பு எனது மகனின் பிரேத்தை ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். எனது மகனின் மீது மோதி விபத்து ஏற்படுத்திய பிக்கப் வேனின் ஓட்டுனரின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் **புகார் மனு** நான் கொடுத்தததுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். எனது மகனின் பிரேதத்தின் முன்பு போலிசார்

பிரேத விசாரணை செய்தார்கள். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்து குறித்து யாரோ ஒருவர் தகவல் சொன்னார் என்றால் விபத்து நடந்த இடத்தில் இருந்த ஒருவர் தகவல் சொன்னார், யார் அந்த நபர் என்று எனக்கு தெரியாது. தகவல் கிடைத்தவுடன் நான் தும்பலுக்கு வந்துவிட்டேன். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண், அதன் ஓட்டுனர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது, விபத்து ஏற்படுத்திய நபர் விபத்து நடந்த இடத்திற்கு அருகில் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் அரசு மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கு குடிபழக்கம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு, புகாரை சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள அரச மரத்தடியில் போலிசார் 3 மணிக்கு எழுதிக்கொண்டார்கள். என் மகன் சாராயக்கடைக்கு சென்று, மது அருந்திவிட்டு நிலைதடுமாறி விழுந்து விபத்தை அவராக ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல, எனது மகனுக்கு குடிப்பழக்கம் இல்லை. சம்பவத்தன்றே போலிசார் புகாரை எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான். எடப்பட்டியில் உள்ள வில்வனுாரில் ஜெக்போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். நான் முயற்சி செய்திருந்தால் வாகனத்தை உடனடியாக போலிசாரிடம் அடையாளம் காட்டி ஜெக்போஸ்ட்டில் வாகனத்தை பிடித்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியின் வாகனம்தான் இடித்தது என்று தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் வாகனத்திற்கும், இந்த விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.32

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.